பிரிவின்படி, தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் குறித்து இவ்வரசு அளிக்கும் உயரளவு உத்திரவாதத் தொகையை அதன் மொத்த மதிப்பு ரூ. 175 கோடி (ரூபாய் நூற்று எழுபத்தைந்து கோடி மட்டும்) வரை உயர்த்தலாமென்று இப்பேரவை அரசிற்குப் பரிவுரை செய்கிறது கூட்டுறவு நிலவள வங்கி அவ்வப்போது மீட்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்களின் மதிப்பு மேற்சொன்ன உத்திர வாதத் தொகையில் அடங்காது. இத்தகைய பத்திரங்களின் செல்திறன் கால அளவு அவை வெளியிடப்படும் தேதியிலிருந்து எந்த ஒரு நேர் விலும் 25 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது. இக் கடனீட்டுப் பத்திரத் தொடர் ஒவ்வொன்றுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளிக்கும் வட்டி வீதத்திற்கு மேற்படாத வட்டி வீதம் கிடைக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இதுபற்றிய விளக்கக் குறிப்பு ஒன்றும் மாண்புமிகு உறுப் பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை அவை நிறைவேற்றித் தரும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

8 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை *(சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 39/72) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்ட மேலவை உறுப்பினர் களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையில்

* 22—8—72-ம தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS